www.freetnbooks.com

| 8 - ஆம் வகுப்பு | காலாண்டுத் தேர்வு - 2025 | |
|---|---|---|
| நேரம்: 2:30 மணி | அறிவியல் | மதிப்பெண்கள்: 100 |

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **10 x 1 = 10**

1. வெப்ப நிலையின் S.I அலகு
   அ) செல்சியஸ் ஆ) பாரன்ஹீட் இ) கெல்வின் ஈ) ஆம்பியர்.
2. கீழ்க் காணும் திரவங்களுள் எது அதிக பாகுநிலை உடையது.
   அ) கிரீஸ் ஆ) நீர் இ) தேங்காய் எண்ணெய் ஈ) நெய்
3. வாகனங்களில் பின் காட்சி ஆடியாகப் பயன்படுத்தப்படும் ஆடி
   அ) குழி ஆடி ஆ) குவி ஆடி இ) சமதள ஆடி ஈ) எதுவுமில்லை.
4. வெப்பம் என்பது ஒரு வகையான
   அ) மின்னாற்றல் ஆ) ஈர்ப்பு ஆற்றல் இ) வெப்ப ஆற்றல் ஈ) எதுவுமில்லை
5. வெப்பநிலைமானிகளில் பயன்படுத்தப்படும் திரவ உலோகம்
   அ) தாமிரம் ஆ) பாதரசம் இ) வெள்ளி ஈ) தங்கம்.
6. ____________ உலோகம் துருப்பிடித்தலுக்கு உள்ளாகிறது.
   அ) வெள்ளீயம் ஆ) சோடியம் இ) காப்பர் ஈ) இரும்பு.
7. அசோட் என அழைக்கப்படுவது எது?,
   அ) ஆக்சிஜன் ஆ) நைட்ரஜன் இ) சல்பர் ஈ) கார்பன் டை ஆக்சைடு
8. மனிதருக்குச் சாதாரண சளியை உண்டாக்கும் நுண்ணுயிரி _____ என அழைக்கப்படுகிறது.
   அ) பிளாஸ்மோடியம் ஆ) இன்புளுயன்சா இ) விப்ரியோ காலரே ஈ) ஆப்தோவைரஸ்'
9. இரு சொற் பெயரிடு முறை ____________ ஆம் ஆண்டு முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது
   அ)1970 ஆ)1975 இ)1978 ஈ) 1623
10. ____________ செல்கள் சிறப்பு வாய்ந்த செல்களாகும், இவை உடலின் எந்த ஒரு செல்லாகவும் மாற இயலும்'
    அ) நரம்பு ஆ) மூல இ) இதய ஈ) எலும்பு

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக** **10 x 1 = 10**

11. மின்னோட்டத்தினை அளவிடப் பயன்படும் கருவி ____________ ஆகும்.
12. எளிய பாதரசமானி முதன்முதலில் ____________ என்பவரால் உருவாக்கப்பட்டது.
13. கண் மருத்துவர் கண்களைப் பரிசோதிக்கப் பயன்படுத்தும் ஆடி ____________
14. இயற்கையாகவே பூமியின் மீது திண்மம், திரவம், வாயு ஆகிய மூன்று நிலைகளிலும் காணப்படும் ஒரே பருப்பொருள் ____________ ஆகும்
15. ____________ குறை கடத்தியாகப் பயன்படுகிறது
16. தீப்பெட்டியின் பக்கவாட்டில் ____________ உள்ளது.
17. ____________ அத்தியாவசியமான உயிர் எனப்படுகிறது.
18. செல்லுக்கு வெளியே காணப்படும் வைரஸ்கள் ____________ எனப்படுகின்றன .
19. முதலாவது உண்மையான நிலத்தாவரம் ____________ ஆகும்.
20. மிகப் பெரிய செல் ____________ன் முட்டை ஆகும்.

**III. சரியா? தவறா?. தவறான வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.** **5 x 1 = 5**

21. குவார்ட்ஸ் கடிகாரங்கள் GPS கருவிகளில் பயன்படுகின்றன.
22. ஆழம் குறையும் போது திரவ அழுத்தம் குறையும்.
23. ஒரு வேதி வினை என்பது தற்காலிக வினை ஆகும்.
24. சின்னம்மை ஒரு தொற்று நோயாகும் .
25. பிரையோஃபைட்டா தாவரங்கள் அனைத்தும் நீர் வாழ்த்தாவரங்களாகும்.



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam

www.freetnbooks.com

**IV. பொருத்துக** **6 x 1 = 6**

26. பாதரசமானி - உராய்வைக் நீக்கும்
27. தொடுபரப்பை அதிகரித்தல் - வளிமண்டல அழுத்தம்
28. தொடு பரப்பைக் குறைத்தல் - உராய்விற்கான காரணம்
29. உயவுப் பொருள்கள் - உராய்வை அதிகரிக்கும்.
30. ஒழுங்கற்ற பரப்பு - பாகுநிலை
31. திரவ அடுக்குகளுக்கு இடையேயான பாய்வு - உராய்வை குறைக்கும்

**V. காரணம் கூறுக** **3 x 3 = 9**

32. அதிக எடையைச் சுமக்க உதவும் பைகளின் பட்டைகள் அகலமாக அமைக்கப்படுகிறது.
33. உணவுப் பொருள்களை உறையீடு செய்வதற்கு அலுமினியத் தகடுகள் பயன்படுகின்றன.
34. கண்ணை புகைப்படக் கருவியுடன் ஒப்பிடுகிறோம்.

**VI. எவையேனும் 15 வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளி** **15 x 2 = 30**

35. ஆம்பியர் -வரையறு.
36. தளக்கோணம் மற்றும் திண்மக் கோணத்திற்கு இடையே உள்ள வேறுபாடுகளைத் தருக?.
37. திரவ அழுத்தத்தை அளவிட உதவும் இரு கருவிகளின் பெயர்களைக் கூறுக!-
38. பரப்பு இழுவிசை தாவரங்களுக்கு எவ்வாறு உதவுகிறது?
39. ஒளி எதிரொளிப்பு விதிகளைக் கூறுக?.
40. குவியத் தொலைவு வரையறு
41. வெப்பம் கடத்தப்படும் முறைகள் யாவை?
42. வெப்பச் சலனம் பற்றி குறிப்பு எழுதுக?.
43. இரசவாதம் வரையறு.
44. வேதிக் குறியீடுகள் தரும் தகவல்கள் யாவை?,
45. மாசுபடுதல் என்றால் என்ன?
46. துருப்பிடித்தல் இரும்புப் பொருள்களுக்கு நல்லதா?. ஏன்?.
47. உலக வெப்பமயமாதல் என்றால் என்ன?
48. உலர் பனி என்பது என்ன? அதன் பயன்களை எழுதுக.
49. எதிர் உயிர்க் கொல்லி என்றால் என்ன?.
50. தடுப்பூசி போடுவதன் மூலம் எந்த நோயைத் தடுக்கலாம்?.
51. இரு சொற் பெயரிடு முறை என்பது என்ன? எடுத்துக்காட்டு தருக?.
52. தாலஸ்-வரையறு.
53. வெவ்வேறு வகையான திசுக்களை வகைப்படுத்துக.
54. காற்று நுண்ணறைகளின் பணிகளைக் கூறுக.

**VII. எவையேனும் 6 வினாக்களுக்கு மட்டும் விரிவாக விடையளி** **6 x 5 = 30**

55. கடிகாரங்களின் வகைகளைப் பற்றி சிறு குறிப்பு வரைக.
56. உராய்வு ஒரு தேவையான தீமை விளக்குக.
57. பெரிஸ்கோப் செயல்படும் விதம் பற்றி விவரிக்கவும்.
58. உலோகங்களுக்கும் அலோகங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளில் ஏதேனும் நான்கினை அட்டவணைப்படுத்துக.
59. வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் வெளியிடும் புகையால் அமில மழை உருவாகிறது என்பதைக் குறித்து விவாதிக்க.
60. கீழ்க்காண்பவற்றுடன் கார்பன் டை ஆக்சைடு எவ்வாறு வினைபுரிகிறது.
(அ) பொட்டாசியம் (ஆ) சுண்ணாம்பு நீர் (இ) சோடியம் ஹைட்ராக்சைடு
61. மனிதரில் நன்மை தரும் பாக்டீரியாக்களின் எண்ணிக்கையை நாம் எவ்வாறு மேம்படுத்தலாம்?
62. மருத்துவத் தாவரங்களின் பெயர்களை எழுதி அவற்றின் பயன்களை விவரிக்கவும்.
63. உட்சுவாசத்திற்கும் வெளிச்சுவாசத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam